# கலைப்பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

# கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்களுக்கான நான்காவது ஆய்வரங்கு – URSA 2024

## ஆய்வுக் கட்டுரைக்களுக்கான அழைப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் ஒழுங்கமைக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் நான்காவது இளங்கலை மாணவர் ஆய்வரங்கிற்கு கலைப்பீடத்தின் சிறப்புக்கலை நான்காம் வருட மற்றும் பொதுக்கலை மூன்றாம் வருட மாணவர்களிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன. ஆய்வரங்கத் தொனிப்பொருளில் அல்லது உப தலைப்புக்களில் தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய மொழிகளில் மாணவர்கள் **ஆய்வுச்சுருக்கத்தினைச்** சமர்ப்பிக்க முடியும். ஆய்வுச் சுருக்கத்தினைச் சமர்ப்பிக்கும் போது மாணவர்கள் தமது ஆய்வு மேற்பார்வையாளரின் அனுமதியினைப் பெற்றிருத்தல் அவசியமானதாகும்.

**ஆய்வரங்கத் தொனிப்பொருள்:**

**“மனிதப்பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களில் உருவாகிவரும் செல்நெறிகளும் எதிர்கால இயங்குதிசைகளும்”**

**“Emerging Trends and Future Directions in Humanities and Social Sciences”**

## ஆய்வரங்க உபதலைப்புக்கள்

- வரலாறு, பாரம்பரியம் மற்றும் கலாசாரப் பன்முகத்தன்மை
- தொல்லியலும் அரசும்
- ஊடகமும் சமூகமும்
- மொழி, இலக்கியம் மற்றும் மொழிபெயர்ப்பு
- இனத்துவமும் முரண்பாடுகளுக்கான தீர்வும்
- சமூக பொருளாதர சமமின்மையும் நீதியும்
- தற்கால சமூகத்தில் சமயம்
- வெவ்வேறு கலாசாரங்களில் அழகியல்
- கல்வியும் சமூகமும்
- காலநிலை மாற்றமும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளும்
- சமுதாய நெகிழ்ச்சி
- அனர்த்த முகாமைத்துவம்
- உணவும் போசனையும்
- ஆரோக்கியமும் நல்வாழ்வும்
- ஒழுக்கமும் மனிதவாழ்வும்
- பால்நிலை ஒப்புரவும் சமத்துவமும்
- நல்லிணக்கம் மற்றும் மாற்றத்திற்கான நீதி
- சட்டமும் ஒழுங்கும்
- சமூக மாற்றமும் சமகால சமூகப்பிரச்சினைகளும்
- சமூக அபிவிருத்தியும் பிராந்தியத் திட்டமிடலும்

## ஆய்வுச் சுருக்கம் அமைப்பதற்கான வழிகாட்டல்கள்

***யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்களுக்கான நான்காவது ஆய்வரங்குக்கு ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கான பக்க வடிவமைப்பு தொடர்பான அறிவுறுத்தல்கள்***

தலைப்பு பாமினி எழுத்துருவில் தடித்த எழுத்துக்களில் 12 புள்ளி அளவில் தனிவரி இடைவெளியுடன் அமைதல் வேண்டும். அதன் கீழ் முதலாவது மற்றும் ஏனைய ஆய்வாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு அவர்களின் பணியிடம் அல்லது கல்வி நிலையம் கீழே குறிப்பிடப்படவேண்டும். கீழ் தொடர்புகொள்ள வேண்டிய ஆய்வாளரின் மின்னஞ்சல் முகவரி குறிப்பிடப்பட வேண்டும்.

First Author Name[a]* and Second Author Name[b]

Affiliation

*Corresponding Author: email@example.com

உதாரணமாக:

### பட்டதாரி மாணவர்களின் மென்திறன்களை வளர்ப்பதில் பட்டக்கற்கைகளின் செல்வாக்கு

**நாதன். க [a]* மற்றும் மூர்த்தி**. மு [b]

பண்பாட்டுத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

***** email@example.com

**ஆய்வுச் சுருக்கம்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்களுக்கான நான்காவது ஆய்வரங்குக்கு சமர்ப்பிப்பதற்காக உங்கள் ஆய்வுச்சுருக்கம் மற்றும் விரிவான ஆய்வுச்சுருக்கம் என்பவற்றை எவ்வாறு தயாரிப்பது என்பதற்கான வழிகாட்டல்களை இந்த ஆவணம் வழங்குகிறது. உங்கள் ஆய்வுச் சுருக்கம் ஆங்கிலத்தில் அல்லது தமிழில் அமையலாம். தமிழில் உங்கள் ஆய்வுச் சுருக்கம் பாமினி எழுத்துருவில் எழுதப்பட வேண்டும். எழுத்துக்களின் அளவு 12, வரிகளுக்கிடையிலான இடைவெளி 1. ஆய்வுச் சுருக்கம் 350 சொற்களுக்கு மேற்படலாகாது, திறவுச் சொற்கள் 5 சொற்களுக்கு மேற்படலாகாது. திறவுச் சொற்கள் ஆய்வுத் தலைப்புச் சொற்களை மீள்பிரதி செய்வதாக அமையக்கூடாது. ஆய்வுச் சுருக்கத்தின் தலைப்பு: 15 சொற்களுக்கு மேற்படாமல் டைம்ஸ் நியூ ரோமன் / பாமினி எழுத்துருவில் எழுத்துரு அளவு 12 இல் தடித்த எழுத்தில் அமைய வேண்டும். உங்கள் ஆய்வுச் சுருக்கத்தில் ஆய்வு அறிமுகம், ஆய்வு வினாக்கள், ஆய்வுப் பிரச்சனை ஆய்வின் நோக்கம், ஆய்வுமுறையியல், ஆய்வின் ஆதாரங்கள், ஆய்வின் பயன் என்பவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். உங்கள் ஆய்வுச்சுருக்கமானது மைக்ரோ சொவ்ற் வேட் (Microsoft Word) வடிவத்தில் குறிப்பிட்ட முடிவுத்திகதிக்கு முன் மாநாட்டு மின்னஞ்சல் ஊடாக இணையவழியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆய்வுச்சுருக்கம் ஆய்வுப் பரப்புடன் தொடர்புடைய நிபுணர்கள் குழுவால் மதிப்பாய்வு செய்யப்படும், மதிப்பாய்வாளர்களின் முடிவு ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் தொடர்புடைய ஆசிரியருக்கு மின்னஞ்சலில் அனுப்பப்படும். ஆய்வுச் சுருக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டால், முடிவுத்திகதி அல்லது அதற்கு முன் ஆய்வுச்சுருக்கத்தை மீண்டும் சமர்ப்பிக்குமாறு ஆய்வாளர்கள் கோரப்படலாம். ஆய்வுச் சுருக்கமானது, மதிப்பாய்வாளர்களால் வழங்கப்பட்ட கருத்துகள் மற்றும் பரிந்துரைகளை கருத்தில்கொண்டு ஆய்வுச் சுருக்கம் மீளத்திருத்தப்பட்டது என்பதை ஆய்வாளர்கள் (ஆய்வு மேற்பார்வையாளரும்) உறுதிப்படுத்த வேண்டும். இது தொடர்பான அனைத்துத் தகவல்களையும் மாநாட்டு இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். உங்களுக்கு மேலும் விளக்கங்கள் தேவைப்படின் தயக்கமின்றி, எங்களைத் தொடர்பு கொள்ளலாம். உங்கள் ஆய்வுச் சுருக்கங்களைப் பெற ஆவலுடன் காத்திருக்கிறோம்.

**திறவுச் சொற்கள்:** திறவுச் சொல் 1, திறவுச் சொல் 2,…….. திறவுச் சொல் 5

**கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய திகதிகள்**

- ஆய்வுக்கட்டுரை கோரல் : 01.10.2024
- ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க வேண்டிய இறுதிநாள் : 30.10.2024
- ஆய்வுக்கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டமையை அறிவிக்கும் நாள்: 14.11.2024
- ஆய்வுக்கட்டுரையினை திருத்தியமைத்துப் பதிப்புக்கு ஏற்றவகையில் அனுப்பும் நாள்: 20.11.2024

**பிரசுர விபரம்**

ஆய்வுச் சுருக்கங்கள் ஆய்வரங்க ஏட்டில் பிரசுரிக்கப்பட்டு ஆய்வரங்கு தினத்தன்று வழங்கப்படும்.

**ஆய்வுச் சுருக்கங்களை சமர்ப்பிக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி:**

ursa@univ.jfn.ac.lk

**ஆய்வரங்க ஒழுங்கமைப்புக் குழு**
**URSA- 2024**
**கலைப்பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**